## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 39. ஸ்ரீதர பண்டிதர்

---

நாம ஜெபத்தின் சுயநலமற்ற பலனை அனுபவித்த பல அன்பர்களுள் இவரும் ஒருவர்.இவரது வாழ்க்கையில் இறைவன் செய்த லீலைப் படிக்கும் போது, நமக்குத் தன்னம்பிக்கை வளர வேண்டும்.நாம ஜெபமும் நாமாவளி பஜனையும் ஸ்ரத்தையுடன் இருக்கும் போது அதனால் ப்ரஹ்ம தத்வம் புலம்படும்.

இவர் மிகச்சிறந்த அந்தணர். அவரும் மனைவியும் ஸ்ரீராம தாரக மஹாமந்தர் பலனை சதா அனுபவிக்கும் வண்ணம் நாம ஜெபத்தில் ஈடுபட்டு ஆன்மீகப் பரிணாமம் ஆகி வருகின்றனர். ஒரு முறை அவர்கள் அயோத்யாவுக்கு திவ்ய யாத்ரை மேற்கொண்டனர்.

அயோத்யாவில் பல்வேறு கோவில்களில் உறையும் எம்பெருமானுக்கு உரிய அழகிய பட்டு ஆடைகளையும் அழகிய சில திவ்ய நகைகளையும் எடுத்துக் கொண்டனர்.அம்மையார் தன் ஆபரணங்கள் அனைத்தும் ஸ்ரீராமனுக்கே என்று சங்கல்பித்து அப்பற்றில் இருந்து விடுபட முடிவெடுத்தார்.

தன் மனம் என்னும் அயோத்யாவை எவ்வித லௌகீகப் பற்றுக்களும் முற்றுகையிடா வண்ணம் ஹனுமானின் அருளை வேண்டி அவர்கள் பக்தி செய்து வருகின்றனர்.

**ராம மந்த்ர சத்யம்**

யாத்ரை தொடங்கிய மறுநாளே சில கள்வர்கள் இவர்தம் கைப்பொருள்களைப் பற்றி அறிந்து கொண்டு வழி மறைத்தனர்.ஆனால் உடனே தங்களைக் கொள்ளையர்கள் எனக் காட்டிக் கொள்ளவில்லை.அவர்களை அடுத்த ஊரில் தங்க உதவுவதாகவும், வனத்தில் கரடிகளில் தொல்லை இரவில் அதிகம் என்றும் கூறினர்.அப்போது அதில் ஒருவன் விவேகம் இன்றி "**ஸ்ரீராம நாமம் மீதான சத்யம்! எங்கள் வார்த்தைகளை நம்புக**!" என்றான்.

இவர்கள் சத்யத்தை நம்பி ஸ்ரீதர பண்டிதரும் பயணத்தை மேற்கொண்டார்.சற்று தூரம் கடந்தவுடன், அவர்கள் தங்கள் கொள்ளை கொள்ளும் குணத்தை வெளிப்படுத்தி ஸ்ரீதர பண்டிதரைக் கொன்றனர்.அம்மையாரைக் கட்டிப்போட்டு அனைத்துப் பொருட்களையும் கொள்ளை செய்தனர்.அப்போது அம்மையார் ஸ்ரீராமனை எண்ணி உள்ளுர வேண்டினார், "***ஹே சீதா பதே! என் கணவரின் உயிர் தீவினைப் பலனால் போயிற்று. பரவாயில்லை, அடியேன் கணவனை***

***இழப்பதும் வாழ்வதும் உன் இஷ்டம்! நீயே அப்படித் தானே வாழ்ந்தாய்! ஆடைகளும் நகைகளும் எமக்குத் தேவை இல்லை! அவை உமக்கே! அவை உன் சொத்துக்கள்! ப்ரபு உன் நாமத்தின் மீது சத்யம் செய்து தவறு செய்ததை எவ்வாறு ஏற்பது? அடியேன் கணவன் மீதான பற்றையும் இல்லறப் பற்றையும் பொன் பொருள் மீதான பற்றையும் விட்டது உண்மையாயின் பொய் சத்யத்துக்கு பதில் கூறுக!"*** என்று மனம் உருகி ப்ரஹ்மத்துடன் இணைய, அப்போதே அங்கே ஒரு மரம் முறிந்து விழுந்து இரு கள்வரும் நசுங்கினர். ஸ்ரீதர பண்டிதர் உயிர் பெற்றார்.தன் கற்பால் தன் கணவனின் உயிரை மீட்ட பலர் வரிசையில் நாம பலனால் உயிர் மீட்டு ஸ்ரீதர மனைவி உதாரண புருஷியாக வருகிறார்.குடும்பத்தின் தீராத வ்யாதிகளையும் கஷ்டங்களையும் முதலில் ஏற்றுக் கொள்க. பின் பக்தி மூலம் மனம் தெளிக.சதா நாம ஜெபம் செய்து மனதையும் தூய்மை செய்யப் பலன் கைகூடும்.

இவர்கள் அயோத்தியிலேயே வேதபாட சாலை ஒன்றை அமைத்துக் கொண்டு நாம ஜெபத்தைப் பரப்பிப் பலருக்கு வழிகாட்டினர்.

ஹரி ஓம்!